தொகுதி 7] [பகுதி 3

பாலர் கல்வி

56

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு வரு ஆனி மீ
JUNE 1942

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உ-க்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 ஜூன் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 4*, 44.
செங்கல் பட்டு — C. H. 30, 34.
சித்தூர் — C. T. 9, 18.
வட ஆர்காடு — N. A. 2, 15, 17, 22, 24, 49, 58.
தென்னார்காடு — S. A. 18, 27, 28, 83.
தஞ்சாவூர் — Tan. 18, 27-A, 36, 43, 91.
திருச்சி — Tri. 14, 19, 29.
ராமனாதபுரம் — Rd. 3, 24, 57, 65, 66, 68.
மதுரை — Md. 1, 27, 85/119, 121/130, 131.
திருநெல்வேலி — Tin. 32, 35, 41, 42, 49.
சேலம் — S. 32, 50, 59.
கோயமுத்தூர் — Co. 24*.

சென்ற வருஷ சந்தாவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.

VENKATRAMA & CO.,

—PUBLISHERS—

ESPLANADE :: MADRAS.

TAMIL CHUDAR VACHAKAMS

By

Vidwan S. G GANAPATI IYER, B.O.L.
&
Vidwan Miss M. MASSILLAMANI, M.A.L.T.
(Women's Christians College, Madras.)

written as per the latest departmental Syllabus and approved by T. B. C. for class use in the Gazette dated 2-6-42.

Reader I	... 0—3—0	Reader V.	... 0—6—6
Reader II	... 0—3—6	Reader VI	... 0—7—0
Reader III	... 0—4—6	Reader VII	... 0—8—0
Reader IV	... 0—5—6		

ARAMBA GANITHAMS

Author M. SOMASUNDARAM, B.A., L.T., Asst., High School, Pasumalai.

Approved by the T. B. C. for class use in C-list dated 2-6-42.

Standard III As. 6 | Standard IV As. 8 | Standard V As. 10

Books in all subjects for all the Standards available.

பொருளடக்கம்

		பக்கம்
1.	தாய் மொழி கற்பித்தல் .... —M. சுப்பிரமணியம்	65
2.	ஆரம்பப் பாடசாலைப் பிரச்னைகள் .... —S. T. ராமானுஜ ஐயங்கார்	72
3.	அனுபவக் கனிகள் .... —P. N. கல்யாண சுந்தரம்	75
4.	பாலர் கணித சம்பந்தமான விளையாட்டுகள் .... —S. ஜகந்நாதன்	78
5.	உபாத்தியாயர்களின் குறைகள்	82
6.	செய்தித் திரட்டு	84
7.	பத்திராதிபர் குறிப்பு	89

புதிய பாடத் திட்டத்துக் கேற்ப இயற்றிய

எமது புதிய நூல்கள்

எமது தமிழ் புத்தகங்கள்

நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், B.A., L.T.,

முதற் புத்தகம்	அணா	2½
இரண்டாம் புத்தகம்	,,	3½
மூன்றாம் புத்தகம்	,,	4½
நான்காம் புத்தகம்	,,	5
ஐந்தாம் புத்தகம்	,,	6

எமது கணித புத்தகங்கள்

புது முறை கணிதம்

ஆசிரியர்

M. S. சுந்தரேச்வரன், M.A., L.T.,

முதற் புத்தகம் .... (ஆறாம் வகுப்பிற்குரியது)	அணா	10
இரண்டாம் புத்தகம் .... (ஏழாம் வகுப்பிற்குரியது)	,,	12
மூன்றாம் புத்தகம் .... (எட்டாம் வகுப்பிற்குரியது)	,,	12

பி. ஜி. பால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

நெ. 102, மோபரீஸ் ரோடு, ஆள்வார்பேட்டை, P.O., சென்னை.

POPULAR C.L.S. SCHOOL PUBLICATIONS

(IN ACCORDANCE WITH THE LATEST SYLLABUS)

HIGH SCHOOL

Mathematics:--(1) A Text book of Elementary Mathematics by A. Kothandaraman, B.A., L.T.

English	Re.	1	12	0
Tamil	Rs.	2	0	0
Telugu	Rs.	2	0	0

History:—History of England by G. W. Ranson

English	Re.	1	0	0
Tamil	Re.	1	4	0
Telugu	Re.	1	4	0

Junior History of India by E. W. Thompson

English	Re.	1	0	0
Tamil	Re.	1	0	0
Telugu	Re.	1	4	0

Science:—Elementary Science for Form IV, by J. P. Manikkam, M.A., L.T. Hon. Prof. Christian College

Tamil	As.	0	11	0
Telugu	As.	0	11	0

MIDDLE SCHOOL

Mathematics:—Elementary Mathematics by A. Kothandaraman, revised according to 1941 Syllabus

Tamil Book I for Form I ...	As.	0	11	0
Tamil Book II for Form II ...	As.	0	11	0
Tamil Book III for Form III ...	As.	0	11	0

Science:—Junior School Science by J. P. Manikkam revised according to the larest syllabus

Tamil Book I for Form I ...	As.	0	8	0
Tamil Book II for Form II ...	As.	0	10	0
Tamil Book III for Form III ...	As.	0	12	0

ELEMENTARY SCHOOL

C. L. S. Geography Series (Tamil):—Geography Book for Standard II by P S. Darling F. R. S. G. ... As. 0 6 0

Geography for Standard V — World & Northern Continents by A. N. Schwartz ... ... As 0 8 0

(Reviewed in May issue of this Magazine.)

Elementary Science for Standards VI, VII and VIII As. 5, As. 6, As. 7, by J. P. Manikkam.

Tamil Readers:—Daniel's Readers I—V.
Amirtha Vasagam I—V.

History:—Basic History of India for Standard V ... As. 7
Indian History for Standard VI ... ... As. 7
Indian History for Standard VII ... ... As. 10
Indian History for Standard VIII ... ... As. 8

Civics:—Civics for Standard IV ... ... As. 5
Civics for Standard V ... ... As. 6
Civics for Standard VI ... ... As. 7

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

POST BOX 501 :: PARK TOWN, MADRAS.

பாலர் கல்வி

தொகுதி 7	1942 ௵ ஜூன் ௴ சித்ரபாநு ௵ ஆனி ௴	பகுதி 3

தாய்மொழி கற்பித்தல்

M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*

XI. மாணவர்களுக்கு ஏன் செய்யுள் கற்பிக்கப்பட வேண்டும்?

கல்வியின் உண்மையான நோக்கம் என்ன?

பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் கேவலம் தொழிற்சாலை நிலைமைக்கு வந்துவிட்டன. கல்விச்சாலைகளில் பிள்ளைகளுக்குக் கலை இன்பந்தரும் பாடங்கள் அதிகமாகக் கற்பிக்கப்படவில்லை. கல்வித் திட்டங்களும் போதனை முறைகளும், கைத்திறனை வெளியாக்கும் வேலைகளும் இலாபம், ஆதாயம், பிரயோஜனம் முதலிய கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆசிரியர்களும், மாணவர்களும் இதர தொழிலாளி சம்பந்தம்போல் ஒன்று கூடி வேலைசெய்து தங்கள் தங்கள் நிலைமாறி பொருள் ஈட்டும் முயற்சியில் அதிகமாக கவனம் செலுத்துகின்றார்கள். **“இயந்திரத் தொழில் கைத்தொழில் மேன்மைகள் எல்லாம் கல்வியின் உண்மையான நோக்கத்தை அகற்றி ஆத்ம சுகத்தைக் கொடுக்கின்றன”** என்று பிளேட்டோ (**Plato**) கூறுவதுபோல தற்போது அமைக்கப் பெற்றுள்ள கல்வியானது மனிதனுக்கு உண்மையான சுகத்தையும் 'சந்தோஷத்தையும் தராமல், போட்டி, பொறாமை என்பவற்றை உண்டுபண்ணுகிறது. **கல்வியின் பாகுபாடுகள் பல துறைகளில் சென்றாலும், அவற்றை ஒருமுகமாகப் பார்க்கும்போது அவை மனித சமூகத்தின் நிலையை உயர்த்துவதோடு மனிதனுடைய ஆத்தும சுகத்தையும் மனோ விருத்தியையும் அதிகரிக்க வேண்டும்.** மன விருத்தியும் சிந்தனை சக்தியும் எவ்வளவு தான் அதிகரித்தபோதிலும் ஒருவ

னுக்கு உண்மையான சுகம் இருக்காது. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து." ஒருவன் உலக இன்பத்திற்கு வெளிப்படையான சில காரணங்களைக் கூறலாம். வெளிப்படையான சில சாதனங்களும் ஒருவனுக்கு அனுகூலமாக இருக்கலாம். எவை இருப்பினும் இன்பத்திற்குக் காரணம் வெளி நிலைமைகளும் சாதனங்களும் அல்ல. பொதுவாக ஒருவனுடைய உள் நிலைமையாகிய ஆத்மநிலையே இன்பத்திற்குக் காரணமாகும். மனநிலையும், ஆத்மசுகமும் ஐம்புலன்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஐம்புலன்கள் மூலமாய் உண்டாகும் அறிவு உயர்ந்த நிலைமையில் இருக்கவேண்டும். நாம் பார்க்கும் பொருட்களும், கேட்கும் சப்தங்களும் உணரும் உணர்ச்சிகளும், சரியான தன்மையில் விளக்கப்பட்டு, மனத்தினுள் சென்றாலன்றி சாந்தம், சமாதானம், நல்லுணர்வு, தயை, தெய்வபக்தி முதலியன உண்டாகா. நிறை பொருளை ஈட்டி வைத்திருக்கும் ஒருவன்கூட இத்தகைய குணங்களை அடைய விரும்புவானாகில் அவன் புலன்களையும், செய்தொழில் தன்மைகளையும், சிந்தனையையும், சரியான முறையில் இவ்வுலகத்தோடு சம்பந்தப்படுத்தியோ அல்லது முழுதும் பொருத்தியோ பார்க்கவேண்டும். எனவே, எவ்விதம் எண்ணிப் பார்த்தாலும் ஒருவனுடைய வாழ்க்கை சுகத்திற்கு உண்மையான காரணம் அவனுடைய அமைதியான மனநிலையேயாகும். இனி கல்வி திட்டங்களில் எது உண்மையான இன்பம் அளிப்பதாக இருக்கிறது என்பதைக் கவனிப்போம்.

கல்வி திட்டங்களில் எது இன்பம் அளிக்கக்கூடியது?

மாணவர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் பல விஷயங்களைக் கற்று வருகின்றார்கள். சயன்ஸ் சாஸ்திர சம்பந்தமாக போதிக்கப்படும் கலைகள் எல்லாம் பொருள் ஈட்டுவதற்கு சாதனமாக இருக்கின்றன. மருத்துவம், அரசியல், பொருள் சாஸ்திரம், பௌதிகம், வாணிபம் ஆகிய இவை ஒருவனுடைய பொருளாசையை வளர்த்து அவனை திருப்தியற்ற நிலைக்குக் கொண்டு வருகின்றன. இலக்கியக் கல்வி ஒருவிதத்தில் மனிதனுக்குச் சுகம் தரலாம். இலக்கியமானது வாழ்க்கையின் விசித்திரங்களை வெளிப்படுத்துவதோடு முக்கிய சம்பவங்களின் ஆழ்ந்த உண்மைகளையும் தெரிவிக்கின்றது. இது மனித சுபாவத்தையும், படைப்பின் அழகையும் விளக்கிக் காட்டி ஒருவனுக்கு ஒருவிதமான நீதியையும் புகட்டுகிறது. ஆனால் கல்வி திட்டங்களில் மாணவர்களுடைய மனத்தைப் பண்படுத்தி அதை விசுவாசம், உண்மை, திருப்தி, இன்பம் முதலியவற்றில் ஈடுபடுத்துவது மஹா கவிகளுடைய கவிகளே யாகும். இத்தகைய கவிகளே அவர்களுக்கு இன்பம் தரும். இலக்கியம், ஓவியம் சங்கீதம், சிற்பம் செய்யுள் என்னும் உயரிய கலைகளில் செய்யுளே பிரதானமாக இருக்கின்றது. சங்கீதம் காதுக்கினிய உணர்வளிக்கக்கூடும். ஓவியம் சிற்பம் முதலியனவெல்லாம் கண்டு நினைக்கும் வரையில்தான்

ஒரேவிதமான இன்பம் தரும். அதில் ஆனால் செய்யுளோ படிக்கும் போது நமது மனத்தையும், உண்டாகும் கருத்தையும் அவ்வப்போது புதுப்புது விதமாக மாற்றி, நமது உணர்வைப் பெருக்கி, எல்லையற்ற இன்பத்தையும் தருகிறது. செய்யுளில் அடங்கி இருக்கும் விசேஷ உண்மைகளைக் குறித்து நினைக்கும்போது நமது உள்ளம் அசைவற்று நிற்கிறது. நமது கற்பனைத் திறன் வரையற்றதாய்ப் பெருகுகிறது. எனவே மாணவர்களுடைய மனத்தைக் கலை சாஸ்திரக் கல்வியில் மிக முக்கியமான செய்யுட் கலையால் பண்படுத்தி அதை இயற்கை வனப்பு, உண்மை உணர்வு, கலைச் சிறப்பு அறிதல், முதலியவற்றில் நாட்டம் உண்டாகும்படி செய்துவிட்டால், அவர்கள் தங்கள் பிற்காலங்களில் பலவிதமான கெட்ட நடத்தைகளில் பிரவேசிக்காமலும், நல்லொழுக்க முறைகளைப் பற்றி நடப்பதிலும் விரும்புவார்கள். ஆகையால் கல்வி திட்டங்களில் செய்யுள் பாடம் மிகவும் முக்கியமானது.

ஒரு பிரச்னை

ஆனால் இத்தகைய நன்மையும், இன்பம் அளிக்கும் செய்யுட் கலையைக் கற்று உணர்ந்து, அதன் உண்மையை மேற்கொண்டு எல்லோரும் இருக்கமுடியுமா? அதாவது உண்மையில் செய்யுள் பாடம் படிக்க ஒவ்வொரு மாணக்கனும் முன் வருவானா? அப்படி வந்தாலும் அவன், தன் பிற்காலங்களில் செய்யுள் கலையால் அடைந்த நெறியைப் பின்பற்றி வாழ்க்கை இன்பங்களை அடையக்கூடுமா? இப்பிரச்னைக்கு விடை எப்படி இருப்பினும் ஒரு விஷயம் மிகவும் முக்கியமானது. பொதுவாக எல்லா மாணவர்களும் இசையோடு கூடிய செய்யுளைப் படித்து கொஞ்சநேரம் வரையிலாகிலும் இன்பம் அடைகின்றார்கள். ஆனால் நன்றாகக் கவனித்துப் பார்த்தால் சிறுவர்கள் எல்லாம் ஒரு சிறு கவிஞர்களே ஆவார்கள்.

பாலர்கள்—சிறு கவிஞர்கள்.

சிறுவர்கள் கவிஞர் மனப்பான்மை உடையவர்கள். பொதுவாக ஒவ்வொரு மாணவனும் தன்சிறுவயதில் அழகான செய்யுட்களைப் படிக்கும்போது ஒரு கவிஞருடைய மன நிலைமையைப் பெறுகிறான். செய்யுளின் பொருள் நன்றாக விளங்காமல் போனாலும், அதில் அமைந்துள்ள, யாப்புத்தன்மை (Rhythm) சொல்லமைப்பு முதலியனவெல்லாம் அவனுடைய உள்ளத்தைத் தொட்டு எழுப்பி உணர்ச்சி தருகின்றன. அப்போது அவனுடைய கற்பனா சக்தியும் கவியின் போக்கிலே செல்கின்றது. உயர்ந்த கவிஞர்களுக்குரிய உணர்ச்சி அவன்பால் இருக்கிறது. இவ்வுணர்ச்சியும் அவனுக்கு உண்மைப் பொருளேயாகும். மேலும் சிறுவன், தான் கண்டதை கண்டபடியே வருணித்துக்கூறும் மனமுடையவனாயும் இருக்கிறான். இப்படிச் செய்வதில் அவனுடைய சந்தோஷம் அளவற்றதாகவும் இருக்கிறது. மேகங்களுக்கு

இடையே ஓடி ஒளிக்கும் சந்திரனும், ஆகாயத்தில் செல்லும் சூரியனும், கடலை ஆடையாகக்கொண்ட பூமியும், மின்னலோடுகூடிய இடியும், இன்னும் பற்பல இயற்கைச் சம்பவங்களும் அவனுக்கு உண்மையான விஷயமேயாகும். உலகக் காக்ஷிகள் அவனுக்கு மகத்தான ஆச்சரியத்தைத் தருவதோடு இன்பத்தையும் உண்டாக்குகின்றன.

மேலும் பாலர்களுடைய குணமும், கவிஞர்களுடைய குணம் போலவே இருக்கிறது. நாம் எந்தப் பொருளைப்பற்றிக் கூறுகின்றோமோ அதை அவர்கள் அப்படியே நம்புவார்கள். இயற்கைப் பொருட்களின் எளிய தன்மையையே விரும்புகின்றார்கள். உணர்ச்சி அனுதாபம் முதலிய குணங்களும் அவர்களிடத்தில் இருக்கின்றன. கஷ்டப்படும் ஒருவனைக் கண்டால் அவர்கள் விசனமடையலாம். பிறர் சிரிக்கும்போது அவர்களோடு சேர்ந்து தாமும், சிரிக்கின்றார்கள். எனவே நம்பிக்கை, உண்மையான உணர்ச்சி, கற்பனை, இளகலான மனம், ஆகிய இக் குணங்களை பாலர்களிடம் நாம் காணலாம். இவை பெரிய கவிஞர்களிடத்திலும் இருக்கின்றன. ஆகையால் பாலர்களும் ஓர் சிறு கவிஞர்களே ஆவார்கள். இவ்வித மன இயல்புடைய மாணவர்களுக்குச் செய்யுள் ஒரு அழியாத உடைமையே யாகும்.

செய்யுள் கற்பது ஒரு அழியாத உடைமை.

பள்ளிக்கூடத்தில் மாணவர் கற்கும்பாடங்கள் பலவேனும் அவற்றுள் சிலவே அவர்களுடைய வாழ்க்கையில் பயன்படுகின்றன. பூகோளம், சரித்திரம், விஞ்ஞான சாஸ்திரம் முதலியன வெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவிலேதான் அவர்களுக்குப் பிரயோஜனமாகி உற்சாகத்தைத் தருகின்றன. தாய்மொழி பாடங்களிலும்கூட இலக்கணம், வசனக் கதைகள் சம்பாஷணை கட்டுரை, விகடக் கூற்றுகள் ஆகிய இவை, ஒரு சிறிதளவே மாணவர்களுக்கு இன்பம் அளிக்கின்றன. இவற்றைப் படிக்கும்போதும், படிக்கக் கேட்கும்போதும் ஒரு அளவில் உற்சாகம் தரக்கூடும். ஆனல் செய்யுளோ இப்படி யல்ல? சிறந்த உண்மைகளும் அழகிய கற்பனைகளும், நிறைந்த மஹா கவிகளுடைய கவிகள் நீடித்த இன்பந்தருகின்றன. "கல்லானேயானாலும்," "அற்ற குளத்தில்," "நீரளவே யாகுமாம்." முதலிய செய்யுட்களும், குமரகுருபர ஸ்வாமிகள் அருளிச்செய்த நீதிநெறி விளக்கம், திருவள்ளுவ நாயனர் திருக்குறள் முதுமொழிகாஞ்சி, திரிகடுகம் சிறுபஞ்சமூலம், சதகங்கள், அந்தாதிகள், தோத்திரப் பாக்களாகிய திருப்புகழ், தேவாரம், நாலாயிரப் பிரபந்தம், கதைப் பகுதிகளாகிய, இராமாயணம், மஹாபாரதம், சிறந்த காவியங்களாகிய, சிலப்பதிகாரம், மணிமேகலை, புராணங்களாகிய பெரிய புராணம், திருவிளையாடல், காந்தம் முதலியனவும், வேதாந்த நூல்களாகிய கைவல்ய நவனீதம், பிரபுலிங்க லீலை ஆகிய இவையெல்லாம் மாணவர்களுக்கு இன்பம் அளிப்பதோடு, அழியாத உண்மைகளையும் போதிக்கின்றன. இந்நூற்கள் எல்லாம், தெய்வ

பக்தி, ஒழுக்க விதிகள், நாட்டுப்பற்று வேதாந்த சாரம் முதலியவற்றையும் படிப்படியாக ஊட்டுகின்றன. மேலும் செய்யுட்கள் மாணவர்களுடைய உணர்ச்சிகளை வளர்த்து அவர்களுடைய கற்பனை உலகத்தைப் பெருக்கி அதில் பற்பல சித்திர உருவங்களாலும், அழகிய இயற்கை வருணனைப் பொருட்களாலும் நிறப்பி அவர்களுக்கு இசை இன்பத்தையும் ஊட்டுகிற படியால் அவை ஒரு அழியாத உடைமைபோல் இருக்கின்றன.

வாழ்க்கைக் கலைக்கு ஆதாரம் செய்யுள்.

செய்யுட் கலையில் ஈடுபட்டுள்ள மனப்பான்மையே, வாழ்க்கையிலும் ஈடுபட்டு இன்பத்தை உண்டாக்கும். வாழ்க்கையில் ஒருவனுக்கு உண்டாகும் அனுபவங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றை இன்ப வழியில் அமைத்து, வைப்பது சுலபமான காரியமல்ல. சிறந்த கலைத் தன்மை வாய்ந்த மனமே இவ்வித முறைகளை அறியும். வாழ்க்கைச் சம்பவங்களில் உண்டாகும் சிந்தனைகளையும், ஒழுக்கப் பிரச்னைகளையும், சாஸ்திர தர்மங்களையும் பரந்த நோக்கத்தோடு சமூக வாழ்விற்கு ஒத்தாற் போல் ஒருவன் சமத்காரமாகப் பொருத்த வேண்டும் ஒரு விசேஷ சம்பவத்தை துக்கம் உண்டாகும் வண்ணமும் மகிழ்ச்சி யளிக்கும் மாதிரியாகவும் ஊன்றிப் பார்க்க முடியும். வாழ்க்கையில் சிலவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். வேறு சில சந்தர்ப்பங்களை கொஞ்சங்கூட கவனிக்காமல் இருக்கவேண்டும். சிலரோடு பழகும்போது இனிமையாகப் பேசி பணிவாக இருக்கவேண்டும். வேறு சிலரோடு சமயோசிதமாய் நடந்துகொள்ள வேண்டும். சில சமயங்களில் ஞாய புத்தியும், சிந்திக்கும் திறமையும் இருந்தால் மாத்திரம் போதா. சில நிலைமைகளில் நன்றாக உணர்ந்து பார்க்கும் சக்தியும் வேண்டும். சில விஷயங்களைக் கட்டாயம் நம்ப வேண்டும். சில உண்மைகளைக் கூறவே கூடாது. சிலவற்றை அவசியமாகச் சொல்லியே தீரவேண்டும். உண்மையாக சில காரியங்களில் நமக்கு நம்பிக்கை அற்றதாக இருப்பினும், அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்வது ஆபத்தாக முடியும். சில ஞாயங்களை உண்மையாகத் தெரிந்துகொள்ள கற்பனை சக்தி வேண்டும். சில உண்மைகள் மறைக்கப்பட்டிருந்தால் அவற்றை வெளியாக்க கற்பனைத் திறன் தேவையாகும். ஒருவன் இவ்வுலகத்தில் இன்பத்தோடு வாழ்வது ஒரு விசேஷ கலையாகும். ஆனால் இக்கலை எப்போதும் இன்பத்தையே தரும்படியாக இலக்கு வைக்கவேண்டும் எனவே ஒருவன் தன் வாழ்க்கைத் தத்துவங்களையும், அனுபவங்களையும், நிச்சியமான மனநிலையோடு உண்மை விளங்கும்படி அறிந்துகொண்டு, சுகம், துக்கம், இன்பம், துன்பம், நட்பு, பகை, அமைதி, பரபரப்பு, முதலியவற்றை நன்றாக பரிசீலனை செய்து தன்னையும் சமூக வாழ்க்கை இன்பத்திற்கு என்று பொருத்திவிட வேண்டும். இதுவே வாழ்க்கைக் கலையாகும். இக்கலையும் செய்யுட் கலைப் பயிற்சியால் உண்டாகும்

செய்யுள் - வாழ்க்கை உண்மைகளை விளக்கும் கருவி

இலக்கியக் கலையானது மனித வாழ்க்கையையே ஆதாரமாகக் கொண்டு, மனிதனுடைய, எண்ணங்கள், கருத்துக்கள், அனுபவங்கள், செய்கைகள், ஆகிய இவற்றை ஒரு குறித்த கலை நோக்கத்தோடு எடுத்துக் காட்டுகிறது. இக்கலையில் விசேஷ உண்மை இருக்கிறது. செய்யுட் கலை, இலக்கியக் கலையின் ஒரு விசேஷ பாகமாகையால் அது மனித வாழ்க்கையின் பற்பல பகுதிகளையும் நன்றாக விளக்கிக் காட்டி இன்பச் சுவை கலந்தளிக்கிறது. செய்யுட் கலை நமக்கு இவ்வுலகப் பொருட்களை இரண்டுவிதமாகக் காட்டுகின்றன. தோற்றமாகிய வெளி உலகத்தில் காணும் பொருட்களின் உண்மைகள், மனிதனுடைய மனத்தில் எவ்வாறு தாக்குகின்றனவென்பது ஒன்று. மற்றொன்று மனிதனுடைய உள்ளத்தில் நிகழ்கின்ற, பொருட்கள் வெளிப் பொருட்கள், நாம் பார்பதற்கு மௌனமாக இருப்பினும் அவை கவிஞர்களோடு பேசுகின்றன. மனிதனுடைய உள்ளம் என்கின்ற ஓர் உலகம் வெளி உலகத்தோடு எவ்வாறு உறவாடுகிறது என்பது ஒரு விசேஷம். இந்த விஷயத்தை மஹா கவிகள் விளக்கிக் காட்டி வாழ்க்கையில் நேரிடக் கூடியவற்றை வரையறுத்து தங்கள் கலை யுருவமாகிய செய்யுட்களில் எடுத்துக் காட்டுகின்றார்கள் இராமாயண காவியத்தில் வான்மீகி முனிவர், அனேக சமூக தர்மங்களை விளக்கிக் காட்டுகின்றார்கள். இவ்விதமாகவே திருவள்ளுவ நாயனாரும் தமது திருக்குறளில், மனிதர் உள்ளத்தை உணர்ந்து அறிந்து குறள்பாவால் சுருக்கமாகக் கூறுகிறார். உத்தம கவிஞர்கள் கவி என்னும் தங்கள் கருவியால் மனித வாழ்க்கைகளின் உண்மைப் பொருளை விளக்கிக் காட்டி, நாம் அந்த வழியில் நடக்கும்படி செய்கின்றார்கள். நாம் அடைய வேண்டிய பொருட்களையும், அவற்றின் முடிவையும், நம் சித்தத்தின் ஸ்வபாவத்தையும், கவிஞர்கள் தங்களுடைய கற்பனைத் திறமையால் அறிந்துகொண்டு, அவற்றைக் கலை யின்பம் வாய்ந்த கவி யுருவாக்கி நமக்குத் தருகின்றார்கள். நாம் அவர்கள் சொல்லும் உண்மைகளை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு, எளிய உபமானங்களையும், அழகிய இன்னிசை வாய்ந்த சொற்களையும், உபயோகிக்கின்றார்கள். எனவே செய்யுட்களை நன்றாகப் படிக்கும் மாணாக்கர்கள் வாழ்க்கையின் பற்பல விசேஷங்களை நன்றாக அறிவதோடு அவற்றை நன்றாகவும் உணர்ந்து தங்கள் நடத்தையையும் சீர்திருத்திக் கொள்கின்றார்கள்.

செய்யுள் கலையால்—மாணவர்களுக்கு உண்டாகும் சில சக்திகள்.

விசேஷ கவிகளில் நாம் உயர்ந்த கற்பனா சக்தியைக் காணலாம். இவற்றைக் கருத்துடன் படிக்கும் மாணவர்களுடைய கற்பனா சக்தியும் படிப்படியாக வளர்கின்றது. இத்தகைய கற்பனா சக்தியே சுயஞானம் **(Intuition)** ஆகிறது. இச்சக்தியோடு ஞாபக சக்தியும் விருத்தி

யடைகிறது. இயற்கை வனப்பை நோக்கும் திறனும், தெய்வ பக்தியும், செய்யுள் படிப்பினால் உண்டாவதோடு, அழகான மொழிப் பயிற்சியும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறமையும் உண்டாகிறது. அநுதாபம், ஒழுக்க விதிகள், உயர்ந்த மனத் தூய்மை, சுபாவங்களை நல்ல வழியில் செலுத்தும் சக்தி, ஆகிய இக்குணங்களும் செய்யுள் படிப்பதால் உண்டாகின்றன.

தமிழ்ச் செய்யுளின் மேன்மை.

ஒவ்வொரு தேசத்திலும் பெரிய கவிஞர்கள் தோன்றி இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் தோன்றின கவிஞர்களுடைய உள்ளமும், அதிலும் தமிழ்நாட்டு மஹா கவிஞர்களுடைய கலைச் சிறப்பும் வேறு. தமிழ்க் கவிஞர்கள், செய்யுளின் உண்மையான நோக்கமாகிய, ஒழுக்கம், தெய்வ நம்பிக்கை, உயிர் ஓம்பல் முதலியவற்றை ஒருபோதும் மறந்ததில்லை. அவர்களுடைய கருத்தில் இவ்வுலகம் கடவுள் சிருஷ்டி, இயற்கை வனப்பு தெய்வ நம்பிக்கையையும், அழியாத உண்மையையும், காட்டுகிறது. சிருஷ்டியில் மனிதன் உயர்ந்தவனாகையால், அவனிடம் எப்போதும் உயர்ந்த குணங்களே இருக்க வேண்டும். ஒழுக்கம், மிகவும் சீரியது. நமது வாழ்க்கையில், அவ்வப்போது சம்பவிக்கும் நிகழ்ச்சிகளை உற்று நோக்கிப் பார்த்தால் அவற்றில் ஈசன் செயலே நிறைந்திருக்கிறது. இவ்வுலக இன்பமெல்லாம் பேரின்பத்திற்கே முதற்படியாக இருக்கிறது. பொருள் ஈட்டுவதின் நோக்கம் அறஞ் செய்வதற்குத் தான். அறத்தின் வழியால் மோக்ஷத்தை அடையலாம். எவ்விதமான செய்கையும் மனத்தூய்மை இல்லாவிட்டால் பிரயோஜனம் இல்லை. இவ்விதமான உயர்ந்த நோக்கங்களையே தமிழ்க் கவிஞர்கள், தாங்கள் இயற்றிவந்த செய்யுட்களில் வைத்திட்டார்கள்.

(தொடரும்)

ஆரம்ப பாடசாலைப் பிரச்னைகள்

S. T. ராமானுஜ ஐய்யங்கார்

(தொகுதி 6, பக்கம் 399 தொடர்ச்சி)

புதிய கொள்கைகள் வேண்டும்

ஆகையால் நாம் புதிய கொள்கைகளுக்காக வேலை செய்வோம். ஆசிரியர்கள் மூலம் விஷயங்களைச் சேகரிக்கவேண்டும். கூட்டுறவு பாடசாலைகளை ஏற்படுத்தவேண்டும். கல்விப் பஞ்சாயத்து என்று சொல்லக் கூடிய ஒரு கல்வி அதிகார வர்க்கத்தை ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். ஆரம்பக் கல்வி விதிகளை பட்டணம், கிராமாந்திரம், தனிப் பட்டவை என்ற பிரிவினைக்குத் தக்கபடி திருத்தி யமைக்கவேண்டும். கிராண்டு விதிகளையும், மானேஜர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், உபகரணங்களுக்கும் தனித்தனி கொடுக்கும்படி மாற்றி யமைக்க வேண்டும். நிரந்தர சம்பள வெட்டுகள் நீக்கப்படவேண்டும். எல்லாப் பள்ளிக்கூடங்களும் முழு கிராண்டுத் தொகைகளைப் பெறவேண்டும். நல்ல பள்ளிக்கூடங்களுக்கு, கடைசி வருஷத்தில் தேர்ச்சியடையும் பையன்களைப் பொறுத்து ஸ்பெஷல் கிராண்டு அளிக்கவேண்டும். சர்க்கார் உத்தரவுகள், டிபார்ட்மெண்ட் சுற்றறிக்கைகள் முதலியவற்றை எல்லாம், கல்வி சம்பந்தப்பட்ட வரையில் ஒளி மறைவின்றி, எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் ஆசிரிய சங்கங்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். யுத்த காலத்திலோ சமாதான காலத்திலோ அவசர காரியங் களுக்கு அனுகூலமாக பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் விதிகளை மாற்றி யமைக்கவேண்டும். பிரதிப் பிரயோஜனமற்ற மாணவர்க் குறிப்பு (Record Sheet) நிறுத்தப்படவேண்டும். டிரான்ஸ்பர் ஸர்டிபிகேட்டுகளைக் கொடுக்கும்படி வற்புறுத்தவேண்டும். ஸர்விஸ் ரிஜிஸ்தருக்குப் பதில் ஆசிரியர் குறிப்புப் புஸ்தகமும், விடுமுறையுள்ள டிபார்ட்மெண்டுக்கான சம்பள விகிதத்தோடு கூடின உத்தியோக விதிகளும், லீவ்விதிகளும் அடங்கிய சட்டமும் ஏற்படுத்தவேண்டும். டவுன்களில் பள்ளிக்கூடங்களுக்கு நிலம் இனாமாகவும், கட்டட வாடகையும் சர்க்கார் கொடுக்கவேண்டும்.

மாகாணக் கல்வி சிலபஸுக்குப் பதிலாக ரேஞ்சு ஆசிரிய சங்கங் களால் தயாரிக்கப்பட்ட முறைகளை உபயோகிக்கவேண்டும். ஓராசிரியர் பள்ளிக்கூடங்களுக்கும், பல்லாசிரியர் பள்ளிக்கூடங்களுக்கும் போதனை திட்டம் தனித்தனி வகுக்கவேண்டும். பயிற்சி பாடசாலைகள் நவீன முறையில் செகண்டரி பாடசாலைகளுடன் சேர்க்கவேண்டும். இன்ஸ் பெக்டர்களும் ஆசிரியர்களும் அவர்களுடைய போதனை சக்தி தேர்ச்சி யில் பரீட்சிக்கப்படவேண்டும். போதனை முறைக்கும், மேம் பார்வைக் கும் தனித்தனி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படவேண்டும். மேம் பார்வையை உத்யோகஸ்தரில்லாதவர்கள் மூலம் நடத்தவேண்டும். ஐந்து ஆசிரியர்களுள்ள முழுப் பள்ளிக்கூடங்களுக்கு ஒரு ஆசிரியர்

அதிகமாக நியமிக்கப்படவேண்டும். குழந்தைகள் தினந்தோறும் பள்ளிக்கூடம் கட்டாயம் வந்து சேருவதற்கு ஒரு திட்டத்தை சில விலக்குகளுடன் ஏற்படுத்தவேண்டும். சர்க்கார், போலீஸ்காரர்களையும். ரிவினியூ உத்யோகஸ்தர்களையும், தாய் தந்தைகளையும், குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு ஜவாப்தாரிகளாகச் செய்ய வேண்டும். முதியோர் பள்ளிக்கூடங்களுக்கு உதவி யளிக்கும்படி ஆரம்பக் கல்விச் சட்டத்தைத் திருத்தவேண்டும். குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாத பெற்றோர்களையும், எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளாத பெற்றோர்களையும் தண்டிக்கவேண்டும். முதியோர் பள்ளிக்கூடங்கள் ஆரம்ப பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டு ஆசிரியர்கள் மாற்று முறை செய்துகொண்டு குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டும். எல்லாவித வருமானங்களையும் ஒன்று சேர்த்து ஆரம்பக் கல்வி நிதி ஒன்று ஏற்படுத்தவேண்டும். ஒரு ஸ்தலத்தின் கல்வி திட்டத்தை அந்த ஸ்தலத்துக் கல்வி அதிகார வர்க்கத்திடம் ஒப்படைக்கவேண்டும். பட்ஜெட் தொகையை 25 சதவீதம் உயர்த்தவேண்டும். தர்மம் செய்பவர்களுக்கு அனுகூலமாயிருக்கும்படி கல்வி எண்டோமெண்டு சட்டம் ஒன்று ஏற்படுத்தவேண்டும்.

மலையாள ஆசிரியர் பிரச்னைகள் (மாகாண விஷயம்)

மலையாளத்து ஆசிரியர் பிரச்னைகளை கடைசியாக நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறேன். மொத்த டீச்சிங் கிராண்டில் ஐந்தில் ஒரு பங்கை மலையாளத்து ஆசிரியர்கள் அடைந்தும் ஏன் அவர்கள் அதிருப்தி யடைகிறார்கள்? ஜில்லா கல்வி கௌன்ஸில் காலத்திலும், இப்பொழுது டிபார்ட்டுமெண்டு அதிகாரத்திலும், ஆரம்ப பாடசாலைகளை அங்கீகரிப்பதில் நிபந்தனைகள் இல்லாமைதான் கஷ்டங்களை உண்டாக்கிவிட்டது. அந்தஸ்தைக் கவனிக்காமல் மானேஜர்கள் அங்கீகரிக்கப்படுகிறார்கள். ஆசிரியர்களும் அவர்களுடைய படிப்பு, போதிக்கும் திறமை முதலியவற்றைக் கவனிக்காமல் நியமிக்கப்படுகிறார்கள். ஆரம்பக் கல்வியின் விஸ்தரிப்பினால், விரும்பத் தகாத மானேஜர்களும், ஊக்கமற்ற ஆசிரியர்களும் சேர்ந்து ஆபாஸப்படுத்தி விட்டார்கள். ஆரம்ப பாடசாலைகளுக்கு வருமானம் போதாது. கிராண்டு சம்பாதிப்பதற்கு, டிபார்ட்மெண்டார் எவ்வளவு அதிகமாக விதிகளையும் வரம்புகளையும் கண்டு பிடிக்கிறார்களோ அவ்வளவு அதிகமாக மானேஜர்களும் ஆசிரியர்களும் தங்களுக்கு அனுகூலமான குறுக்கு வெட்டுகளைக் கண்டு பிடித்து நடத்துகிறார்கள். ஸ்டாதாம்போக்கானது (Statham drive) உதவி யளிக்கும் பழைய திட்டத்தின் குறைகளை வெளிப்படுத்துகிறது. ஆனால் ஆசிரியர்களும் ஆசிரிய சங்கங்களும் ஸ்டாதாம் திட்டத்தின் கெடுதல்களை வெளிப்படுத்துகின்றார்கள். மானேஜர்கள் கிராண்டு சம்பாதிக்க அனுகூலமான விதிகளைக் கைக்கொள்ளுகிறார்கள். ஆசிரியர்களுக்கு முழு கிராண்டையும் கொடுக்கிறதில்லை. ஆசிரியர்களும் தங்கள் உரிமைகளைப்

2

பாராட்டத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் செய்யவேண்டியது சுருக்கமாக என்னவென்றால் .—

(a) 85 சதவீத கிராண்டுக்குப் பதிலாக சம்பள விகிதம் ஏற்படுத்த வேண்டும். (minimum scale of pay.)

(b) சம்பளங்களை ஆசிரியர்களுக்குக் காலத்தில் நேரிடச் சர்க்காரே கொடுக்கவேண்டும்.

(c) சம்பளத்தைக் கருதாமல் கட்டாய பிராவிடெண்டு பண்டு ஏற்படுத்தவேண்டும்.

(d) குறிப்பிட்ட கிரேடிலுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரி சம்பள விகிதம் ஏற்படுத்த வேண்டும்.

(e) பழைய அங்கீகாரங்களை எல்லாம் புனர் விமர்சனம் செய்து கெட்ட மானேஜ்மெண்டுகளை நீக்கிவிட்டு மானேஜர்களை ரிஜிஸ்தர் செய்து கொள்ளும்படி வற்புறுத்தவேண்டும்.

(f) பயிற்சியும் போதனை சக்தியும் அற்ற ஆசிரியர்கள் நீக்கப்பட வேண்டும்.

(g) குழந்தைகளின் நன்மையை உத்தேசித்து ஆசிரியர்களும் அதிகாரிகளும் ஒருவிதமான சினேகப்பான்மையாக நடந்துகொள்ளவேண்டும்

சுருங்கச் சொல்லுமிடத்து, கல்வி யுடையவர்களுக்கும் பசியோடு கூடின ஆசிரியர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. உண்மையை ஆராய்ந்து தீர்மானிப்பது தான் நியாயமாகும். அதிகாரத்தின்மேல் இவ்விஷயத்தைக் கவனிக்காமல் அடக்கிவிடக் கூடாது.

உடனே தேவை

நான் டைரக்டராக இருந்தேனானல், கெட்ட மானேஜர்களையும், கெட்ட ஆசிரியர்களையும் நீக்கிவிட ஏற்பாடு செய்வேன்.

சென்னைக் கல்வி மசோதாவில் ஒவ்வொரு கிரேடு ஆசிரியருக்கும் தகுந்த சம்பள திட்டத்தை ஏற்படுத்தி பழைய நிபந்தனைகளை எல்லாம் ரத்துசெய்ய அதிகாரம் பெற்றுக் கொள்வேன்.

ஆசிரியருக்கு டீசிங் கிராண்டை சர்க்கார் பொக்கிஷத்திலிருந்து நேரிட பட்வாடா செய்ய உத்தரவிடுவேன்.

பிராவிடெண்டு பண்டை கட்டாயப்படுத்தி ஒவ்வொரு ஆசிரியரும் கொடுக்கும் பங்கோடு சர்க்கார் ஒரு பங்கு சேர்க்கும்படி செய்வேன்.

பள்ளிக்கூடங்களை விட்டு விலகிக்கொள்ள விரும்பும் மானேஜர்களுக்குத் தக்கபடி உதவி யளித்துவிட்டு கூட்டுறவு பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவேன்.

இந்த மகா நாட்டின் கடமையானது நேருக்கு நேராகப் பார்த்து நடந்து கொள்ளாதவர்களை ஜெயிக்கவேண்டும். இந்த மகா நாட்டினால் அனுவசியமான பேச்சுப் பேசாமல் மாகாணச் சம்புள விகிதம் ஏற்படுத்தப் போராடுவோமாக.

அநுபவக் கனிகள்

P. N. Kalyanasundaram, *Headmaster, Bd. Ele. School, Madurantakam.*

2. பள்ளிக்கூடத்தில் மியூசியம்

மியூசியம் என்பது பொருட்காட்சிச்சாலை எனப் பொருள்படலாம். சென்னை போன்ற பெரிய நகரங்களில் இத்தகைய சாலைகள் உள்ளன. அவற்றில் பண்டைக் காலந்தொட்டு இன்று வரையில் மனிதனால் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள், சரித்திர சம்பந்தமாகவும், இயற்கைப் பாட, பூகோள பாடங்களுக்கு அநுகுணமான பொருள்கள், அழகிய சிற்பங்களின் சின்னங்கள், விக்கிரகங்கள், பிராணிகளின் எலும்புக்கூடுகள் போன்ற எண்ணற்ற பொருள்களைக் காணலாம். இவையன்றி சித்திர சம்பந்தமான பொருட்காட்சிகளும் உள்ளன. மேற்கண்ட 'மியூசியங்கள்' ஏராளமான பொருட் செலவில் சேகரிக்கப்பட்டுப் பொதுஜன உபயோகத்திற்காக நிறுவப்பட்டுள்ளன. மேற்கண்ட 'மியூசியம்' பார்ப்பதற்கு அதிசயம், ஆனந்தம் இவைகளைப் பெரியோர்களாகிய நமக்கு அளிக்கக்கூடும். நம் தேசத்தின் பண்டைப் பெருமைகளை எந்நாளும் மறக்கவொண்ணாதபடி நினைவூட்டிக் கொண்டிருக்கலாம்.

ஆனால் 'பாடசாலையில் உள்ள மியூசியம்' அதன் அவசியம், என்பது பற்றி ஆசிரியர்களாகிய நாம் அறிய வேண்டியது அவசியத்திலும் அவசியம் ஆகும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் 'ஒரு பொருட்காக்ஷிச்சாலை இருக்க வேண்டும். 'பாடசாலையின் பொருட்காக்ஷி' ஒரு தனியிடத்தில், அறையில், அல்லது அதற்கென்று ஒரு பெரிய சதுர மேஜை மீது வைக்கப்படலாம். சில பாடசாலைகளில் மேனேஜ்மெண்டாரால் 'மியூசியம் டேபில்' என்று தனிப்பட்ட மேஜை சப்ளை செய்யப்படுகிறது. அது கிடைக்காவிடில்—'மனமுண்டானால் இடம் உண்டு' என்றபடி ஆசிரியர்கள் தங்கள் பாடசாலையில் உள்ள ஒரு பெஞ்சியை இதற்கென்று உபயோகிப்பதில் என்ன தவறு. நிற்க, மியூசியம் அவசியமா என்று ஆராய்வோம்.

'மியூசியம்' ஒரு பாடசாலையின் திறமையை அளக்கும் அளவுகோலாகும். பள்ளிக்கூடத்தைக் காணவரும் பெற்றோர், பெரியோர், அதிகாரிகள் இவர்களை 'மியூசியம்' வரவேற்கும் வண்ணம் இருத்தல் வேண்டும். மியூசியத்தில் உள்ள பொருள்கள் யாவும் குழந்தைகளின் கல்வி அபிவிருத்திக்குத் துணை செய்வனவாக இருத்தல் வேண்டும். சீக்கிரத்தில் நேரில் காட்ட முடியாத இயற்கைப் பொருள்கள் மியூசியத்தில் வைக்கப்படவேண்டும். ஏராளமான பொருள்களைச் சேகரித்து வைத்துக் கொண்டுதான் பாடசாலை மியூசியம் நிறுவ வேண்டுமென்று சில ஆசி

ரிய நண்பர்கள் கருதுகிறார்கள். அதற்காகச் சேகரித்து வருவதும் உண்டு. ஆனால் அவர்கள் பாடசாலையில் அவைகளை வைப்பதில்லை. இஃது 'அலை ஒய்ந்த பிறகு தலை முழுகுவேன்' என்று சமுத்திரக்கரையில் குந்தியிருப்பவனையே நினைவூட்டும்.

மியூசியத்தில் நிறையப் பொருள்கள் வைக்கப்படவேண்டுமென்பதில்லை. நன்றாகக் குழந்தைகளுக்குத் தெரிந்த பொருள்கள், குழந்தைகளால் ஆசிரியரின் உதவிகொண்டு சேகரிக்கப்பட்ட பொருள்கள் சிலவை மட்டும் உள்ளன. ஓர் பாடசாலை மியூசியம்—கல்வி போதனைக்குப் பெரிதும் உதவும். பாடசாலையில் உள்ள மியூசியம் அதிக அழகாக இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது. ஆசிரியரும் எதிர்பார்க்கக் கூடாது. குழந்தைகளிடம் உள்ள பல இயற்கைச் சக்திகளில் 'பொருள் சேகரிக்கும் ஆற்றல்' என்ற சக்தியை உபயோகப்படுத்தவே பாடசாலை மியூசியம் நிறுவப்பட வேண்டும்.

பாடசாலை மியூசியத்தில் அதிக விலையுயர்ந்த பொருள்கள், ஆசிரியர்களால் மட்டும் சேகரிக்கப்பட்டவை, செத்த பூச்சிகள், அருவருப்பூட்டத்தக்க பொருள்கள் இவைகள் இருத்தல் கூடாது. போதனா முறைக்கு உபயோகப்படாத பொருள்கள் வெகு அழகாக இருந்தாலும் அவற்றை வைக்கக்கூடாது. ஒரே மாதிரியான பல சாமான்களை வைப்பதும் நல்லதல்ல. உதாரணமாக பல சிறுவர்கள் ஆசிரியரிடம் ஒரே மாதிரியான கூழாங் கற்களைக் கொண்டுவருகிறார்கள். அவற்றை முழுவதும் மியூசியத்தில் வைக்கலாமா? குழந்தைகளின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக கொண்டுவந்த பொருள்களை ஆசிரியர் வாங்கிக்கொண்டு பின்னர் தேவை யுள்ளதை ஆசிரியர் தேர்ந்தெடுத்து மியூசியம் டேபிளில் வைக்கவேண்டும். சில சமயங்களில் குழந்தைகள், செத்துப்போன வண்ணாத்திப் பூச்சியையோ, அல்லது மாட்டு எலும்பு, அல்லது பாம்பெலும்பு முதலிய பொருள்களையோ கொண்டு வருகிறார்கள். அவைகளை வேண்டாமென்று தள்ளி விடுவதும் கூடாது. காட்சிச் சாலையில் வைக்கவும் கூடாது. இந்தச் சமயத்தில் ஆசிரியர் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டும். 'Love for doing' அதாவது குழந்தை, காரியத்தை ஆசையோடு செய்யும் ஆற்றலை நாம் கொன்று விடுவதும் பாபம். ஆகவே அவற்றை வாங்கிக்கொண்டு இதமான வார்த்தைகளால் கூறி குழந்தைகளே அவை வேண்டியதில்லை என்று தெரிந்து கொள்ளும் படி செய்தல் வேண்டும்.

நிற்க, மியூசியத்துக்குப் பொருள் சேகரிப்பது பள்ளிக்கூடக் குழந்தைகளின் காரியமாகவே இருத்தல் வேண்டும். ஆனால் ஆசிரியர் என்னென்ன பொருள்களைச் சேகரிக்கலாம், அவை எங்கு கிடைக்கும் என்பனபோன்ற குறிப்புகளை அவ்வப்போது குழந்தைகளுக்கு உதவ வேண்டும்.

முடிவாக, ஒரு சிறிய பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட மியூசியத்தில் என்னென்ன பொருள்கள் வைக்கப்படவேண்டும் என்று சில நண்பர்கள் கேட்கலாம். இது விஷயமாக நான் ஒரு ஜாபிதா வெளியிட இஷ்டப்படவில்லை. ஏனெனில் ஒரே விதமான பொருள்கள் ஒரு பொருட் காக்ஷியில் கூடாதென்று சொன்னபடியே—எல்லாப் பாடசாலைப் பொருட் காக்ஷிகளும் ஒரே விதமாக இருப்பதும் விரும்பத் தக்கதாகாது. ஆயினும் சுருங்கச் சொல்லின், போதனா முறைக்கு அநுகுணமான, குழந்தைகள் ஆசிரியரின் உதவி கொண்டு சேகரித்த எல்லாப் பொருள்களும் பொருட் காக்ஷியை அலங்கரிக்கலாம். ஆயின் சில குறிப்புகளை நாம் கவனத்தில் கொள்ளலாம். இயற்கைப் பாடம், சித்திரம், கைவேலை, சரித்திரம், பூகோளம் இந்தப் பாடங்களில் வரும் குறிப்புகளை விளக்கக்கூடிய பொருள்கள் மியூசியத்திற்கு வேண்டியவை. உதாரணமாக, சிறுவர்கள் செய்யும், களிமண் பொம்மைகள் (நன்றாயில்லாவிட்டாலும்கூட) சிறுமிகள், உல்நூல் கொண்டு செய்த கைவேலைச் சாமான்கள், பனை ஓலையால் செய்த சிறு பெட்டிகள், கிலுகிலுப்பைகள் முதலியன, காலி வத்திப்பெட்டிகளால் விதைகள் சேகரிப்பதற்காகச் செய்யப்பட்ட அலமாரிகள், காகிதப் பூக்கள், கயிறு திரித்தலில் மாதிரிக் கயிறுகள், பலவித கற்கள், விதைகள், கொட்டைகள், புதிய மாதிரிக் கிளிஞ்சல்கள், சோழிகள், சிறுவர்கள் அட்டையால் செய்த சிறு பெட்டிகள், வளையல்களைக்கொண்டு செய்த கைவேலைகள்—பூந்தொட்டி—முதலியவை பொருட் காக்ஷியில் வைக்கப்படவேண்டும்.

இவை மட்டுமன்றி சரித்திர சம்பந்தமான, பூகோள சம்பந்தமான படங்களின் ஆல்பங்கள், அசோகர் நாட்டிய தூண் (அட்டையால் செய்த மாடல்) திராவிடர் உபயோகித்த ஆயுதங்கள், (அட்டையால்), இவைபோன்ற மாடல்கள் வைக்கப்படலாம்.

தாவர பாடத்திற்கு:—பள்ளிக்கூட அருகாமையில் உள்ள மரங்களின் பட்டைகள், இலைகள் (பல மாதிரியானவை) ஒட்டிய ஆல்பம், ஒற்றைப்பருப்பு, இரட்டைப்பருப்பு விதைகள், முதலியவை. வத்திப்பெட்டிப் படங்களின் ஆல்பம், ஸ்டாம்ப் ஆல்பம், பக்ஷிகளின் இறகுகள் ஆல்பம் முதலிய எண்ணிறந்த உபயோகமான பொருள்கள் மியூசியம் வைக்கப்படலாம்.

ஆதலின் குழந்தைகளின் சேகரிக்கும் சக்தியில் அவர்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடையும் வண்ணம் செய்வதுடன், கல்வியிலும் உபயோகப்படும் வண்ணம் 'மியூசியம்' ஒன்று ஒவ்வொரு பாடசாலையிலும் கட்டாயம் நிறுவப்படுவது அவசியமாகிறது. இவைதவிர படங்களும், சார்ட்டுகளும் பாடசாலை அலங்காரம் என்ற தலைப்பில் அடங்கும். பள்ளிக்கூடத் தோட்டத்திலும் மியூசியத்துக்குப் பொருள் சேகரித்தல் முடியும் என்பதைக் கூறுதலும் மிகையாகாது.

பாலர் கணித சம்பந்தமான விளையாட்டுகள்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

(46-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னம் போதித்தல் சம்பந்தமான உபகரணங்கள்.

பொதுவாக உபாத்தியாயர்கள் பின்னம் போதிக்க ஒரு சதுர அல்லது நீண்ட சதுரக் காகிதத்தையே மடித்துக் காட்டுகிறார்கள். பாட புத்தகங்களிலும் அவைகளையே தெரிவித்திருக்கிறார்கள். வாழ்க்கை முறையில் தோசை, இட்டிலி, வடை, அடை, போளி, ஆப்பம், அதிரஸம், முறுக்கு, அப்பளம் போன்றவைகள் பொதுவாக கனவட்டமாகவும், வாழைப்பழம், பிட்டு போன்றவைகள் நீண்ட உருளை வடிவமாகவும், மாம்பழம், ஆரஞ்சு, ஆப்பிள், கொய்யா, விளா, போன்ற பழங்களும், லட்டு, உருண்டை (போண்டா) போன்றவைகளும் உருண்டை வடிவாகவுமே காணப்படுகின்றன. வீட்டுப் பழக்கங்களில் இவைகளைப் பகிர்ந்து கொடுக்க சந்தர்ப்பம் ஏற்படுகின்றன. பள்ளிக்கூட முறையிலும் பரந்த வட்டம், உருண்டை இவைகளையே 2, 4, 8, 16; 10; 3, 6, 12 ஆகப் பகிர்ந்து காட்டவேண்டும் என்று விரும்புகிறேன். வட்டத்தை 3, 6, 12 ஆகப் பகிர்ந்ததை அடியிலுள்ள படம் காட்டும். ஒரு சதுரக் காகிதத்தை 2 ஆக மடிப்பது கணக்குப் பிரகாரம் சரிதான். ஆயினும் பின்னப் படுத்துவது, மூளிபடுத்துவது நன்றாக தெரியவரா. பருமன் சிறியதாக ஆகும். வடிவம் உருவம் மாறாது. வட்டத்தை உருண்டையை பின்னமாக்க பருமனும், உருவம் கலந்தே மாறி பின்னத்தைக் காட்டும். பழச் சுளைகளும் நன்றாக பின்னத்தைக் தெரிவிக்கின்றன. உருண்டையைச் சமபின்னமாக்க அவ்வளவு சுளைகள் தென்படும்.

சமபின்னம் விளக்குதல்.



வட்டத்தின் பின்னங்களைக் கொண்டும் சுளை போன்ற உருண்டையின் பின்னங்களைக் கொண்டும் சமபின்னங்களை எளிதில் விளக்கலாம்.

$\frac{1}{2} = \frac{2}{4} = \frac{4}{8} = \frac{8}{16}$; $\frac{1}{2} = \frac{3}{6} = \frac{6}{12}$; $\frac{5}{10}$

$\frac{1}{3} = \frac{2}{6} = \frac{4}{12}$: $\frac{2}{3} = \frac{4}{6} = \frac{8}{12}$

$\frac{1}{4} = \frac{2}{8} = \frac{3}{12} = \frac{4}{16}$: $\frac{1}{5} = \frac{2}{10}$

ஒரு பாதியைக் கீழே வைத்து அதன் மீது 2 கால் பங்கு, 8 அரைக்கால் பங்குகள் 8 வீசம் பங்குகள் முறையே அடுக்கு மீது அடுக்காக வைக்க $\frac{1}{2} = \frac{2}{4} = \frac{4}{8} = \frac{8}{16}$ என்பது எளிதில் விளங்கும். அதே போல் சுளைகளையும் கையில் வைத்துக் கொண்டு சம பின்னங்களைக் காட்ட முடியும். கீழ்தர வகுப்புகளுக்கு இவ்விளையாட்டுப் பயிற்சிகள் அப்பியாசமாக இவைகளை அடிப்படையாகக் கொண்டே மேல் வகுப்புப் பாகங்கள் எளிதில் தெரியவரும். சமபின்னப் பயிற்சி பின்னக் கூட்டல் பின்னக்கழித்தல் இவைகளுக்கு ஆதாரமானதாகும்.

சாதாரணப் பெருக்கல் விளையாட்டுகள்

விளையாட்டு நே. 19.

பிட்டு சமைத்தல் :—குழந்தைகள் ஈர மணலை கொட்டாங்கச்சிக்குள் நிரப்பிக் கவிழ்த்து பிட்டு சமைப்பார்கள். இதற்கு பணச் செலவு கிடையாது. கிடைக்குமானால் பித்தளை, அலுமினிய கிண்ணங்களை உபயோகிக்கலாம். அடியிற் கண்ட படம் போல் பிட்டு சமைத்து வாய்பாடுகளை விளக்க முடியும். கீழேயுள்ளது 4-ம் வாய்பாடு கற்பிக்கும் முறையைத் தெரிவிக்கிறது. படத்திற் காட்டியபடி இடம் வகுத்து ஒழுங்காக பிட்டுகளை வைக்க உபாத்தியாயரே கற்றுக்கொடுக்கவேண்டும். இரண்டுபேர் சேர்ந்து ஒருவன் மாறி மாறி பிட்டு சமைப்பதும், மற்றொருவன் மாறி மாறி இடத்தை ஒழுங்குபடுத்தவும் முன்னேற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

நான்கு நான்காகக் கூட்டல் பயிற்சி:—4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40. பிறகு வாய்பாடு முறை இவ்வாறு பழக்கம் கொடுப்பது



மேலானது. வகுப்பிலும் மேலே கண்ட படம் போல் பலகை அல்லது அட்டை, அல்லது கெட்டிக் காகிதத்தில் எழுதித் தொங்கவிடலாம். மணி கோத்துத் தொங்க விடுவது போலவே இது ஒரு நன்முறையாகும். ஒவ்வொரு வாய்ப்பாட்டிற்கும் பிட்டு சமைத்தல் பொருத்தமானதாகும்.

விளையாட்டு நெ. 20.

குதிரை பூட்டுதல், (இரட்டைக் குதிரை சேர்த்து) இரண்டு குதிரைகளை அறிவிக்க 2 பையன்களும், குதிரைகளை ஒட்ட வண்டிக்காரனை ஒரு பையனும் ஆக 3 பேர் சேர்ந்து இரட்டைக் குதிரை கோச்சு ஆட்டம் ஆடவேண்டும். தோள்பட்டை கஷ்கம் வழியாகக் கயிறு வருவதைக் கவனிக்கவும். இரண்டு குதிரை லகான்களையும் தளர்த்திப் பிடித்து பின்னால் நிற்பவன் குதிரையை ஓட்டவேண்டும். ஆகவே ஒரு வண்டிக்கு 3 பிள்ளைகள் வேண்டும்.

இம்மாதிரி 10 வண்டிகளுக்கு 30 பையன்களை நிறுத்தி வைக்க 3-ம் வாய்பாட்டை எளிதில் செய்து கொள்ளலாம்.

3—6—9—12—15—18—21—24—27—30 என்றும்

$1 \times 3 = 3$

$2 \times 3 = 6$ ....$10 \times 3 = 30$ என்றும் கற்றுக்கொடுக்க முடியும்.

விளையாட்டு நெ. 21. சிப்பாய் ஆட்டம்

பிள்ளைகளை வரிசைக்கு இரண்டாக நிறுத்தி வைத்து ஒவ்வொருவர் கையிலும் ஒரு கொடி கொடுக்கலாம். இது பார்வைக்கு அழகாக இருக்கும். இவர்களை அந்த ஒழுங்கு மாறாமல் நடந்து வரச் சொல்ல அவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்.

முதலில் 1 வரிசை—2	1 × 2	என்றவாறு காட்டி 2-ம்
பிறகு 2 வரிசை—4	2 × 2	வாய்ப்பாட்டை விளக்க
பிறகு 3 வரிசை—6	3 × 2	முடியும். உபகரணமே
பிறகு 4 வரிசை—8	4 × 2	இங்கு தேவையில்லை.

பிள்ளைகளைக் கொண்டே பிள்ளைகளுக்குப் பாடம் போதிக்க இவ்வேற்பாடு ஏற்றதாகும். பழைய நாள் பல்லாங்குழியும் பெருக்கல் வாய்ப்பாடு செய்ய ஏற்ற உபகரணம் ஆகும்.

22. கோலி ஆட்டம் : கோலியைக் கோலியால் அடித்தல்

23. பந்து எறிதல்

24. கிட்டிப் பந்து : கிட்டியால் பந்தை அடித்தல்

ஒவ்வொரு விளையாட்டிலும் மலை என்ற ஒரு இடம் அமைத்துக் கொள்ள வேண்டும். அந்த இடத்திலிருந்து குறிப்பிட்ட காரியத்தைச் செய்து மலைக்கும் கோலி அல்லது பந்து விழுந்த இடத்திற்கும் உள்ள தூரத்தை அளவு நாடா, அளவு அடிக்கோல் கொண்டு அளக்கவேண்டும். யார் இவ்விளையாட்டில் முதலாவன் என்று கேட்கலாம்; தூரத்திலிருந்து சொல்ல வேண்டும். தான் தான் அளந்த தூரத்தைப் பலகையில் எழுதி அவற்றில் முதலாவது, இரண்டாவது, மூன்றுவது என்ற பிரகாரம் இரண்டு வரிசையிலாவது, கடைசி அதைவிடக் கொஞ்சம் அதிகம் என்று ஏறு வரிசையிலாவது அடிக்கணக்கில் அளந்த தூரத்தை வரிசைப்பட எழுதச் சொல்லலாம். மனத்திற்குத் தோன்றிய பிரகாரம் எண்களை இம்மாதிரி அப்பியாசத்திற்குக் கொடுப்பதற்குப் பதிலாக தாங்களே விளையாடி அளந்து கணக்கிட்ட புள்ளிகளைக்கொண்டு கணக்குகள் செய்வது உண்மையைக் காட்டுவதுமன்றி குழந்தைகளின் சொந்த அனுபவத்தால் வந்ததுமாயிருக்கும்.

25. நூறு ஆயிரம்பாண்டி

பல குழந்தைகள் இவ்விளையாட்டை விளையாடுகிறார்கள். பாண்டிக்கு எதிரே "மலை" ஒன்ற ஒரு இடம் அமைத்துக் கொள்ள வேண்டும்.



பொதுவாகப் பிள்ளைகள் ஒரு சில் எடுத்து வீசிப் போட்டால் பாண்டியில் சில் விழக்கூடியதாய் இருக்கவேண்டும். சில் எறிந்து பிள்ளைகள் நொண்டி நொண்டி வந்து சில்லை துதித்து அதை ஒரே காலால் வெளியே தள்ளி அதை ஒரு தாண்டில் மிதிக்கவேண்டும். அப்படிச் செய்யின் சில்விழுந்த இடத்தில் காணப்படும் எண்ணை இவர்கள் கெலித்தார்கள். அவ்விதம் மாறி மாறி ஆடி ஆயிரம்சேர்த்துவிட்டால் அவன் பாண்டியின் பக்கத்தில் காலால் ஒரு வட்டம் வரைந்து கொள்ளலாம். எந்த சமயத்தில் தான் உதைத்து வெளியில் தள்ளுகிறகாய் சற்றே தூரம் போனால், தானே 1000 சம்பாதித்து வரைந்த வட்டத்தில் ஒரு தாண்டு தாண்டிமறுபடியும் ஒரு தரம் தாண்டி சில்லை மிதிக்கலாம். அல்லது பாண்டிக்குள் நொண்டி வருகையில் சற்று களைப்பாயிருந்தால் தான் சம்பாதித்த வட்டத்தில் சற்று இளைப்பாறலாம். இவ்வாறு எவ்வளவோ விளையாட்டுகளை உபாத்தியாயர் கண்டறிந்தும் சிருஷ்டித்தும் வரக்கூடும். கிராமத்திலுள்ள பொருத்தமான விளையாட்டுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் அப்படிச் செய்யின் அம்முறை தேச கால வர்த்தமானம் பாத்திரத்திற்கு ஒத்ததாகும்.

உபாத்தியாயர்களின் குறைகள்

கல்வி இலாகா டைரெக்டர் பிரசங்கம்

சென்ற ஞாயிறன்று சென்னை கல்வி இலாகா டைரெக்டர் சர். ஆர். எம். ஸ்டேதம் மலப்புரத்தில் தேசிய யுத்த முன்னணியை ஆரம்பித்து வைத்தார். இந்த சந்தர்ப்பத்தில் அவர் தமது பிரசங்கத்தில் உபாத்தியாயர்களின் குறைகளையும் கஷ்டங்களையும் குறிப்பிட்டார்.

உபாத்தியாயர்களின் நிலைமை

ஸர். ஸ்டேதம் 1936-ம் வருஷத்திற்கு முன்பு ஏற்பட்டிருந்த உபாத்தியாயர்களின் அதிருப்திகரமான நிலைமையையும் அவர்களுடைய தற்போதைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பேசுகையில், இப்பொழுது பயிற்சி பெற்ற உயர்தர உபாத்தியாயர்களுக்கு கொடுக்கப்பட்டுவரும் கிராண்டு தொகைகள் அதிகரித்திருப்பதாகவும், மத்தியதர வகுப்புப் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களின் கிராண்டுகள் இரண்டு மடங்கு அதிகரித்திருப்பதாகவும் சொன்னர். அவர் மேலே பேசியதின் சாரம் :— கிராண்டுகள் இன்னும் அதிகமாக உயர்த்தப்பட வேண்டுமென்பதே எனக்கு விருப்பம். ஆயினும் இப்பொழுது இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டதில், சர்க்காருக்கு ஏராளமான செலவு ஏற்பட்டுவிட்டது. முன்போலன்றி இப்பொழுது மூன்று மாதத்திற்கு ஒருதடவை கிராண்டுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு முக்கியமான அம்சமாகும். பாடசாலைச் சொந்தக்காரர்கள் நடத்தையில் உபாத்தியாயர்களுக்கு அதிருப்தியிருக்குமிடங்களில், அவர்களுக்கு நேரிலேயே சர்க்கார் சம்பளம் பட்டுவாடா செய்யலாமென்பதும் குறிப்பிடத்தக்க விஷயம். உபாத்தியாயர்களுக்கு ஸர்விஸ் ரிஜிஸ்டர் வைக்க ஏற்பாடாகியிருக்கிறது. இந்த ரிஜிஸ்டரில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களை அமுலுக்குக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்னுடைய இலாகா அதிகாரிகள், உபாத்தியாயர்களிடமிருந்து வரும் புகார்களை கவனத்துடன் விசாரித்து அவைகளை நிவர்த்திக்க முடிந்தவரையில் முயன்று வருகிறார்கள். 1936 முதல் 1941 வருஷம் வரையில் 5 வருஷங்களில் உபாத்தியாயர்களின் கிராண்டுகள் தொகை 50 லக்ஷ ரூபாயிலிருந்து 80 லக்ஷ ரூபாய் வரையில் உயர்ந்திருக்கிறது. இது சர்க்காரின் தாராள நோக்கத்தையே வெளியிடுகிறது.

இரண்டு வருஷத்தில் 14 லக்ஷ ரூபாய் கிராண்டு

ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர் 1936 வருஷத்திற்கு முன்பு பெற்றுவந்த சம்பளத்தைக் காட்டிலும் இப்பொழுது குறைவாக சம்பளம் பெற்றுவருவதாகக் குறை கூறுவது உண்மையல்ல. சர்க்கார் பெற்றுவரும் பாடசாலை உபாத்தியாயர்கள் முன்பு பெற்றுவந்த சம்பளத்தைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாகவே பெற்றுவருகிறார்கள். கிராண்டுத் தொகைகளிலும் அவர்களுக்கு இப்பொழுது பங்கு கிடைத்து வருகிறது. சர்க்கார் உதவிபெற்றுவரும் பாடசாலைகளின் நிர்வாகச் செலவில் ஒரு பகுதியைக் கொடுத்து உதவுவதற்காகவே சர்க்கார் உதவி முறைப் பாடசாலைத் திட்டமாக ஏற்பட்டது. ஆகவே, அப்பாடசாலைகளின் ஜாடா நிர்வாகச் செலவுகளையும் சர்க்காரே கொடுக்கும்படி கேட்பது நியாயமில்லை. இப்பொழுது கூட அம்மாதிரி நடைபெறும் ஆரம்பப் பாடசாலை நிர்வாகச் செலவுகளில் சர்க்கார் 100-க்கு 90 சத விகிதம் கிராண்டு கொடுத்து வருகின்றனர். சென்ற 2 வருஷங்களில் மட்டும் ஆரம்பப் பாடசாலைகளின் உதவி கிராண்டுக்காக சர்க்கார் 14 லக்ஷ ரூபாய் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

"புரட்சிக்ரமான மாறுதல்"

ஸர் ஸ்டேதம் கடைசியாகப் பேசுகையில் சென்ற 18 மாதங்களாக ஜில்லா போர்டு உபாத்தியாயர்கள் உத்தியோக நிலையில் ஏற்பட்டுள்ள "புரட்சிகரமான மாறுதலை"ப் பற்றிக் குறிப்பிட்டார். மாகாணத்திலுள்ள ஜில்லா போர்டு ஆரம்பக் கல்வி வரவு செலவு திட்டத்தை ஒன்றுபடுத்திவிட வேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறார் என்றும் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்கள் சம்பளத்தை விகிதப்படி கொடுத்து விடவேண்டும் என்றும் சம்பளம் பிடித்தம் செய்யகூடாதென்றும் கிரமப்படி அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கவேண்டும், சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாகவும் மிஸ்டர் ஸ்டேதம் சொல்லி முடித்தார்.

அங்கு கூடியிருந்தவர்கள் தேசீய யுத்த முன்னணி பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட பிறகு கூட்டம் கலைந்தது.

—சுதேசமித்திரன்

செய்தித் திரட்டு

திருவண்ணாமலை தாலூகா பஞ்சாயத்து போர்டு ஆசிரியர்கள் யூனியன் (வட ஆற்காடு)

18—5—42-ல் இச் சங்கத்தின் காரியக் கமிட்டிக் கூட்டம் யூனியன் தலைவரும் ஜில்லா சங்கக் கூட்டுக் காரியதரிசியுமான ஸ்ரீ காளியப்பன் அவர்கள் தலைமையில் கூடியது.

ஜில்லா கல்வி அதிகாரியவர்களின் உத்தரவு படிக்கப்பட்டு கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :—

1. பெண்பிள்ளைகளைச் சேர்த்து மனுச் செய்துகொண்டிருக்கும் பாடசாலைகளுக்கு உடனே அங்கீகாரமும்

2. கூடிய சீக்கிரம் கிராமத்தில் இருக்கும் பெண்பிள்ளைகளைச் சேர்த்து மனுச் செய்துகொள்ளும் பாடசாலைகளுக்குப் பின்பு அங்கீகாரமும்

3. கிராமங்களில் பெண்பிள்ளைகளைச் சேர்க்க மிகவும் கஷ்டமாயிருக்கும் பாடசாலைகளுக்கு ஒரு வருஷ நீடிப்பு அங்கீகாரமும் கொடுத்து, தற்போதைய உத்தரவினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கொடுத்து உதவும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

விழுப்புரம் தாலூகா டீச்சர் மானேஜர்கள் யூனியன் (தென்னாற்காடு)

1—3—42-ல் மேற்படி டீச்சர் மானேஜர்களின் மகாநாடு விழுப்புரம் வக்கீல் ஸ்ரீ G. V. தேசிகன் அவர்கள் தலைமையில் கூடி சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. பிரதி வருஷமும் எக்காரணத்தை முன்னிட்டும் கிராண்டு தொகையில் பிடித்தம் செய்யக்கூடாது என்றும், பிடித்தம் ஏற்படுவதால் சர்க்கார் எதிர்பார்க்கும் அளவில் பாடசாலைகளை நடத்தமுடியாதென்றும்

2. நான்கு ஆசிரியர்களாவது அதற்கு அதிகப்பட்ட ஆசிரியர்களாவது வேலை செய்யும் ஆங்கிலம் போதிக்கப்படாத பாடசாலைகளிலும் செக்கண்டரி கிரேடு ஆசிரியர்களைத்தான் நியமிக்கவேண்டும் என்ற சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும் அல்லது அவர்களுடைய கிராண்டு விகிதத்தை ரூ. 30-க்கு குறையாமல் உயர்த்தும்படியும்,

3. லோகல் போர்டு பாடசாலை ஆசிரியர்களின் சம்பள விகிதப்படி திரவிய சகாயம் பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் கிராண்டு விகிதம் உயர்த்தப்பட வேண்டுமென்றும்,

4. ஒன்பது நபர்கள் கொண்ட காரியக் கமிட்டி நிறுவி, தலைவரும் காரியதரிசியும் இச் சங்கத்தை ஜில்லா சங்கத்துடன் இணைக்க ஏற்பாடுகள் செய்யும்படியும் இம்மாநாடு தீர்மானித்தது.

மறுபடி 17—5—42-ல் இச் சங்கக் காரியக் கமிட்டி தலைவர் ஸ்ரீ நடராஜய்யர் தலைமையில் கூடிற்று. தீர்மானங்கள் :—

1. மகாநாட்டுத் தீர்மானத்துக்கு எதிராக அதிகப்பிடித்தத் துடன் மார்ச் மாதத்திய கிராண்டு கொடுக்கப்பட்டிருப்பதை வருத்தத் துடன் தெரிவித்துக்கொள்வதுடன், நஷ்டத்தை ஈடு செய்யும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. ஜூலை மாதத்தில் ஜில்லா மகாநாட்டை நடத்த தக்க ஏற்பாடு கள் செய்யும்படி காரியதரிசியையும் தலைவரையும் கேட்டுக்கொள்ளுகிறது.

இந்து மத பாடசாலை, வாலாஜாபாத் (செங்கற்பட்டு) வள்ளலார் மாணவர் இல்லம்.

பெற்றோர்களுக்கு அறிவிப்பு

இப்பாடசாலை கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூன் மாதம் 8-ந்தேதி திறக்கப்பட்டு நடக்கிறது. புது மாணவர் பலர் சேரலாம்.

இப்பாடசாலையில் பல ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள். இல வசக் கல்வியும், பல சமய அறிவும் சிறுவர்களுக்குப் போதிக்கப்படுவ தோடு பலவித தொழிற் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது.—நூற்றல், நெய்தல், தையல், தச்சு, பொத்தான், தந்தம், ஈயம்பூசல், மரம் அறுத் தல் முதலிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

மாணவர் இல்லத்தில் ஆதித்திராவிடர்கள் இலவசமாகச் சேர்த் துக்கொள்ளப்படுகிறார்கள். செல்வவந்தர்கள் ரூ. 7-ம், ஏழைகள் தங்கள் நிலைமைக்குத் தக்கவாறும் கொடுத்து வருகிறார்கள்.

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

சுவாமி விவேகாநந்தர்

ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம்	விலை	0—12—0
,, ,, கடிதங்கள்	,,	0—10—0
,, ,, நமது தாய் நாடு	,,	0— 8—0
,, ,, சுவாமிகள்	,,	0— 3—0
,, ,, எனது குருநாதர்	,,	0— 3—0

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

சேர விரும்புவோர் அதற்கென்று ஏற்பட்ட பாரத்தை இரண்டணு அனுப்பிப் பெற்று அதில் விண்ணப்பித்துக் கொள்ளலாம். விலாசம் 'இல்லத் தலைவர், வள்ளலார் இல்லம், வாலாஜாபாத்.'

ஜில்லாபோர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், மதுராந்தகம் (செங்கற்பட்டு)

31-5-'42-ல், கமிட்டி மெம்பர்கள் கூடி ஆலோசித்து நிறைவேற்றிய சில தீர்மானங்கள் :—

1. சங்க வருஷாந்திரக் கொண்டாட்டமும் பொருட்காட்சியும் ஜூலை மாதத்தில் நடைபெறும். தேதியும் இடமும் கூடியசீக்கிரம் தெரிவிக்கப்படும்.

2. நமது ரேஞ்சிலுள்ள 8 கிளை ஸ்தாபனங்களும் பாலர் கல்விக்கு உடனே சந்தா கட்டிவிடவேண்டும்.

3. மௌன வாசிப்பு முறையையும், பெண் குழந்தைகளையும், ஆதித்திராவிடக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க ஆசிரியர்கள் முயலவேண்டும்.

4. கிராமங்களில் பெற்றோர் சங்கங்களை நிறுவி ஆஜர் குறைவை நிவர்த்திக்கவும்.

5. கனம் டைரக்டர் இந்த யூனியனை அங்கீகரித்ததற்கு நன்றி செலுத்துகிறது.

6. ஆசிரியர்களை மாற்றாமல் உள்ளூரிலேயே இருக்கும்படி ஆதரிக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. இவ்வருஷம் ஆசிரியர்கள் முயற்சியால் அதிகப் பெண்களும் ஆதித்திராவிடர்களும் சேர்ந்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், வத்தலகுண்டு (மதுரை)

11—4—42-ல் இச்சங்கத்தின் வருஷாந்திர விழா சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. K. V. ராஜகோபாலய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் 'பாலைவனச் சிறுவனும் எஸ்கிமோ சிறுவனும்' என்ற நாடகத்தை நடித்து மகிழ்வித்தனர்.

உசிலம்பட்டி பூகோள ஆசிரியர் ஸ்ரீ N. சீதாராமையர் அவர்கள் 'ஆரம்ப பாடசாலைகளில் பூகோளம் கற்பித்தல்' என்பது பற்றி விரிவான உபந்நியாசம் செய்தார். ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ S. ராஜாராமையர் அவர்கள் 'சென்னை மாகாணமும் ஆரம்பக்கல்வியும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

பிறகு மாணவர்களால் கவி பாரதியாரின் வாழ்க்கையில் சில காட்சிகள் நடித்துக் காண்பிக்கப்பட்டன.

போர்டு ஆண் பாடசாலை, வத்தலகுண்டு மாணவர் சங்கம்

30—4—42-ல் இச்சங்கத்தின் முதல் ஆண்டு விழா ஸ்ரீ B. N. கிருஷ்ணையர் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் சங்கீதத்தினாலும் பேச்சுத் திறமையாலும் வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர். லோகல் பண்டு டாக்டர் ஸ்ரீ V. ராமலிங்கமய்யர் செஞ்சிலுவைச் சங்கத்தைப் பற்றி உபந்நியசித்தார். பாரதியார் பாட்டுப் போட்டியில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், கோடைக்கானல் (மதுரை)

9—5—42-ல் இச்சங்கக் கூட்டம் நடைபெற்றது. ஊரல்பட்டி போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ நாகராஜய்யர் தலைமை வகித்தார். தீர்மானங்கள் :—

1. ஜில்லா போர்டு ஆசிரியர்களின் குழந்தைகளை ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களில் சம்பளமின்றி சேர்த்துக் கொள்ளும்படி ஜில்லா போர்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது

2. இராமனுதபுரம் ஜில்லா போர்டு உதவியதுபோல் மதுரை ஜில்லா போர்டாரும் யுத்த காலத்தை முன்னிட்டு சாமான்களைச் சேகரித்து வைத்துக்கொள்வதற்காக மூன்று மாதச் சம்பளத்தை முன் பணமாகக் கொடுத்து உதவும்படிகேட்டுக் கொள்ளுகிறது.

திருநாவுக்கரசு வித்யாசாலை, நேமத்தான்பட்டி (ராமனுதபுரம்)

10—5—42-ல் இச்சாலையின் 16-வது ஆண்டு விழா உயர்திரு. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் கொண்டாடப் பெற்றது. அப்பொழுது திரு. சு. முருகேச முதலியார் அவர்கள் 'திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டு' என்பது பற்றி விரிவாகப் பேசினர். மாணவ மாணவிகளின் பாட்டு, நடிப்பு முதலியன இனிய காட்சியளித்தன.

தருமபுரி தாலுகா ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் மறு பயிற்சி

(Refresher Course)

25—5—42 முதல் 28—5—42 வரையில் தருமபுரி போர்டு உயர்தரப் பாடசாலைக் கட்டிடத்தில் இத்தாலூகா ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிக்கும் வகுப்புகள் நடத்தப்பட்டன. சேலம் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் வகுப்புகளை ஆரம்பித்து வைத்து, ஆரம்ப பாடசாலைகளில் தாய்ப் பாஷையை சுலபமாகவும் சீக்கிரமாகவும் போதிக்கும் நவீன முறைகளை விளக்கிக் கூறினர்.

தருமபுரி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ N. சதாசிவம் அவர்கள் ஆரம்ப வகுப்புகளுக்கு கணித சாஸ்திரம் போதிக்கும் நவீன முறைகளைப் பற்றி சொற்பொழிவு செய்தார்.

தருமபுரி ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ ராஜகோபால அய்யங்கார் அவர்கள் சரித்திர பாடங்களைப் பற்றியும், குழந்தைகளுக்கு எளிய முறையில் சரித்திரம் கற்பிக்கும் வழியையும் பற்றிக் கூறினர்.

தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ சுகவன சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் தமிழ் மொழியைப் பற்றியும், குழந்தைகளுக்குக் குறைந்த காலத்தில் அதிக தேர்ச்சியடைய ஆசிரியர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும் விரிவாகக் கூறினர்.

கிருஷ்ணகிரி ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ M. ஷண்முகம் அவர்கள் பூகோளத்தைப் பற்றியும், அதனல் குழந்தைகளுக்கு ஏற்படும் அறிவு அபிவிருத்தியைப் பற்றியும் விளக்கமாகக் கூறினர்.

டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ N. சதாசிவம் அவர்கள் அதிக ஊக்கம் எடுத்துக்கொண்டு அப்போதைக்கப்போது ஆசிரியர்களுக்கு உண்டாகும் சந்தேகங்களை நிவர்த்தி செய்தார். எவ்வித நிர்ப்பந்தமுமின்றி சுமார் 120 ஆரம்ப ஆசிரியர்கள் இதில் கலந்துகொண்டு ஊக்கம் காட்டியது மெச்சத் தக்கது. அவர்கள் யாதொரு சகாயமுமின்றி முன்வந்து மறு பயிற்சி பெற்றுச் சென்றது அவர்களுக்குத் தங்கள் தொழிலில் உள்ள ஆர்வத்தையும் முன்னேற்றத்தையும் காட்டுகிறது என்று சொல்வது மிகையாகாது.

திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் செலவு பிரத்தியேகம்)

: வேண்டுபவர்கள் :

ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்

ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

பத்திராதிபர் குறிப்பு

ஆரம்ப ஆசிரியர்களும் துரைத்தனத்தாரும்:—சென்ற வாரத்தில் கள்ளிக்கோட்டை தேசிய யுத்த முன்னணியைத் திறந்து வைக்கும் காலத்தில் ஸர் ஸ்டாதம் ஒரு பிரசங்கம் செய்துள்ளார். அதன் சாரம் இப்பகுதியில் வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளில் பல எவ்வாறு நீக்கப்பட்டுள்ளன என்பதை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். 1936-ம் வருஷத்திற்கு முன்பு ஆரம்ப ஆசிரியர்களின் சர்விஸ் திட்டத்தில் பல குறைகளிருந்தன. அவர்களுக்கு கொடுத்துவந்த சம்பளம் மிகக் குறைவானதாயும், அதுவும் காலாகாலத்தில் கொடுக்கப்படாமலும் இருந்து வந்தது. ஆசிரியர்களின் சம்பளத்தை மாதா மாதம் கொடுக்கப்படுவதற்காக சில விதிகளை துரைத்தனத்தார் இப்பொழுது ஏற்படுத்தியுள்ளார். வருடத்தில் ஒரு முறை கிராண்டு கொடுப்பதற்கு பதிலாக 3 மாதத்திற்கு ஒரு முறை கிராண்டு அளிக்கப்படுகிறது. இதிலும் உதவி பெறும் பள்ளிக்கூடத்தில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு, சம்பளம் சரிவரச் சேராவிட்டால் நேரிடஅவைகளை பட்வாடா செய்வதற்கான விதிகளையும் ஏற்படுத்தியிருக்கிருர்கள். கிராண்டு வீதமும் சிறிதளவு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனல் இப்படி உயர்த்தப்பட்ட போதிலும் ஆசிரியர்களின் வருமானம் மிகக் குறைவாகவே இருக்கிறது. முன்பு ஒரு ஆசிரியருக்கு ரூ. 144 என்ற வீதத்தில் உதவி யளித்து வந்தார்கள். இப்பொழுது அதை ரூ. 168 ஆக உயர்த்தியுள்ளது போற்றத் தக்கதே. ஆனல் இந்த ரூ. 168—ல் 15 சதவீதம் பள்ளிக்கூட மானேஜர் எடுத்துக்கொள்ளலாம். அதனல் ஆசிரியருக்குச் சேருவது ரூ. 143 தான். முன்பு இருந்ததை விட ரூபாய் 1 குறைந்துவிட்டது. பல இடங்களில் ஆசிரியர்களுக்காக அளிக்கப்படும் உதவி அவர்களைச் சேராமலேயிருந்தது. அப்படி சேர்ந்தாலும் வெகு சிறு பகுதியையே பல ஆசிரியர் அடைந்தனர். இப் புதிய திட்டத்தினுலும் டிபார்ட்மெண்டின் கண்காணிப்பினுலும் பெரும்பாலும் ஆசிரியர்கள் தங்களுக்குண்டான அளவு கிராண்டுகளைப் பெற்று வருகிருர்கள் என்று நம்புகிறேம். கிராண்டுத் தொகையை அதிகரித்ததினுல் மானேஜ் மெண்டுகளுக்கு நன்மை யேற்பட்டது. ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையினுல் பொருள்களின் விலை ஏறி வருகின்றது. ஜீவனம் செய்வது மிகக் கஷ்டமாக இருக்கின்றது என்பதை எல்லோரும் அறிவார்கள். கவர்ன்மெண்டு இலாகாவி

னுள்ள சிப்பந்திகளுக்கு விலை அதிகரித்திருப்பதின் காரணமாக யுத்த அலவன்ஸ் அல்லது பஞ்சப்படி (Dearness allowance) என்று உதவி அளிக்கப்பட்டு வருகிறது. உதவி வரும் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்து வரும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு பொருள்களின் விலையேற்றத் தால் மிகுந்த கஷ்டங்கள் உண்டு. அவர்களுக்கும் இந்த சகாயம் செய்ய வேண்டியதின் அவசியத்தை துரைத்தனத்தார் உணர்ந்து ஆலோசித்து வருகிறார்கள் என்று ஸர் ஸ்டாதம் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டுள் ளார். ஸர் ஸ்டாதம் இதன் அவசியத்தை கவர்ன்மெண்டுக்கு வற் புறுத்துவார் என்று நாம் முழுதும் நம்புகிறோம்.

ஸர் ஸ்டாதம், ஆரம்பக் கல்வி பட்ஜெட்டில் ரூ. 15 லக்ஷம் அதிகரித் துள்ளதாக சொல்லியுள்ளார். இது மிகவும் பாராட்டத்தக்கது. இவ் வளவு அதிகரித்தும் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள பள்ளிக்கூடங்க ளுக்கு அளித்திருக்கும் மான்யம் கிராண்டு விதிகள்படி உண்டானதைக் காட்டிலும் குறைவாயுள்ளது என்று அங்குள்ள ஆசிரியர்ச் சங்கங்களி னின்றுவரும் கடிதங்களிலிருந்து தெரிகிறது. கிராண்டு விதிகள்படி உண்டான கிராண்டை, ஒரு குறைவுமில்லாமல் அளித்து வந்தால் ஆசிரி யர்களுக்குப் பெரும் நன்மை யேற்படும். கல்வி முன்னேற்றமும் துரிதப் படும் என்பதில் ஐயமில்லை. இந்த வெட்டுகளுக்குக் காரணம் போது மான பணம் இல்லை என்பதே என்று சொல்லப்படுகிறது. வர்த்தக வரி ஏற்பட்டிருப்பதால் நமது மாகாண வருமானம் அதிகரித்துள்ளது. இக்காலத்தில், ஆரம்பக் கல்விக் கென்று கிராண்டு விதிகள்படி எவ்வளவு பணம் வேண்டுமோ, அவ்வளவு பணத்தை அதற்கென்று ஒதுக்கி வைக்கவேண்டும். அப்படிச் செய்தால் ஆரம்ப ஆசியரிர்களுக்கு நிச்சய மான நன்மை ஏற்படும்.

ஸர் ஸ்டாதம் ஆரம்பக் கல்வி முன்னேற்றத்தை தமது முக்கிய லக்ஷியமாகக் கொண்டு மிகுந்த ஊக்கத்துடன் கவனித்து வருகிறார். இவர் நமது மாகாணத்தில் கல்விக்காகச் செய்துள்ள சேவை மிகவும் போற்றத்தக்கதே. நமது மன்னர் பிறந்தநாள் அன்று, இவருக்கு ஸர் பட்டம் அளிக்கப்பட்டுள்ளது நமது நேயர்களுக்கு மிகச் சந்தோஷம் அளிக்கும் என்று கருதுகிறோம். கல்வி முன்னேற்றத்திற்காகவே இவர் கொண்டுள்ள ஆர்வத்தைப் போற்றியே இந்தப் பட்டம் இவருக்கு அளிக் கப்பட்டிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

நமது புதிய பிரசுரங்கள்

பூவர்ணனை BY N. சுப்ரஹ்மண்ய அய்யர், M.A., L.T., & K. ராமமூர்த்தி, M.A., L.T., (Dip. Geo.)

புதிய பாட திட்டத்தை ஒட்டியது.

நான்காம் வகுப்புக்குரியது .... விலை அணா 7.

ஐந்தாம் வகுப்புக்குரியது .... விலை அணா 8.

I, II, III பாரங்களுக்குரியது விலை அணா 10 ; அணா 12 ; அணா 12.

அங்க கணிதம் BY S. ராதாகிருஷ்ண அய்யர், B.A., & K. வைத்தியனாதஸ்வாமி அய்யர், B.A.,

அவர்களால் எழுதப்பட்டதை

புதிய பாட திட்டத்தை முழுதும் தழுவி

S. ராஜமைய்யர், B.A., L.T., அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

Book I for Form I 0—10—0 ; Book II for Form II 0—12—0

Book III for Form III 0—12—0

P. வரதாச்சாரி அண்டு கம்பெனி

நெ. 8, லிங்கி செட்டித் தெரு, சென்னை

REGD. No 1506

அசோகா

MILD SCENTED

ASOKA

ரிஜிஸ்டர் நெ. 1506

அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி,

அசோகா பாக்டரி,

கோயமுத்தூர்.

Regd. No. M. 3473

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள்:

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள்:

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

தற்கால கையிருப்பு ...	...	ரூ. 2,25,000
பாலிஸிக்கள் ...	...	1,350
யூனிட்டுகள் ...	...	2,500

அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினல், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

Printed by L. Raghuraja Bharati at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.